உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.518/2023

பெயர் :ராணி (அ.சா.4)
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :லிங்கம்
வயது :45
கிராமம் :இடையப்பட்டி, குடிசைமாற்றுவாரியம்
வட்டம் :மேலூர், மதுரை
தொழில் :கூலிவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

08.06.2026

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் 2பேரும் எனது வீட்டிற்கு அருகாமையில் வசித்து வருகிறார்கள். ராதிகா எனது மகள் ஆவார். அ.சா.1 முனிச்சாமி என்ற அஜித் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1 முனிச்சாமி என்ற அஜித் என்பவருக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக காவலர்கள் என்னை விசாரித்தார்களா என்றால் அதுபற்றி தெரியாது என்னை யாரும் விசாரிக்கவில்லை. அஜித்தை, விஜயும் முத்துவும் வெட்டியதாக சொன்னார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. நான் சித்தாள் வேலை செய்வதற்காக ஒத்தக்கடைக்கு சென்றவிட்டேன் அதனால் எனக்கு எதுவும் தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

அஜித் தங்கை பிரியா(அ.சா.3)வை தெரியுமா என்றால் தெரியும். கட்ந்த 01.11.2022 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் நானும் என் மகள் ராதிகா மற்றும் அ.சா.3 பிரியா ஆகியோர் வீட்டில் உட்கார்ந்து பேசி கொண்டிருந்த போது, வெளியே சத்தம்கேட்டு, சென்று பார்த்த போது, அ.சா.3 பிரியாவின் அம்மாச்சி வீட்டருகே, ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1 முனிச்சாமி என்ற அஜித் என்ற நபரை அரிவாளால் ஆஜர் 1ம் எதிரி விஜய், அவருடைய இடதுகையில் வெட்டியதாகவும், ஆஜர் 2ம் எதிரி முத்து

கத்தியால் அ.சா.1 முனிச்சாமி என்ற அஜித்தை தலையில் வெட்டியதாகவும், மேலும் சராமரியாக இருவரும் அ.சா.1 முனிச்சாமி என்ற அஜித்தை வெட்டி அவருக்கு கொடுங்காயம் ஏற்படுத்தியதை நேரடியாக பார்த்துவிட்டு, அதுபற்றி அ.சா.1 முனிச்சாமி என்ற அஜித்தை விசாரித்தபோது, 1ம் எதிரியின் மனைவியிடம் அ.சா.1 முனிச்சாமி என்ற அஜித் தவறாக செல்போனில் தகவல் அனுப்பியதை மனதில் வைத்து கொண்டு, ஆஜர் எதிரிகள் வெட்டியதை தெரிந்தும் தற்போது பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.06.08 21:45:35 +0530

Assistant Sessions Judge

Melur